பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
*04 01 2026 SUNDAY 12 40 PM*
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தமிழகத்தில் இன்றும் நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம், தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. லடாக் யூனியன் பிரதேசத்தில் அரசு வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று யூனியன் பிரதேச நிர்வாகம் அறிவித்துள்ளது.

5. வெனிசுலாவின் இடைக்கால அதிபராக திருமதி. *Delcy Rodriguez* நியமிக்கப்பட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், வாரணாசியில் நடைபெறும் தேசிய வாலிபால் போட்டிகளை காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாடு முழுவதிலுமிருந்து 58 அணிகள் பங்கேற்பது, ஒரே பாரதம் – உன்னத பாரதம் என்பதை எதிரொலிப்பதாக குறிப்பிட்டார்.

கடந்த 11 ஆண்டுகளில் இந்தியா விளையாட்டுத்துறையில் பெரும் முன்னேற்றத்தை கண்டு வருவதாக அவர் கூறினார்.

விளையாட்டு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் சீர்திருத்தங்களுடன் கூடிய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இப்போட்டி வரும் 11ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

>>>>>>><<<<<<<<

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தமிழகத்தில் இன்றும் நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

புதுக்கோட்டையில் இன்று மாலை, பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரனின் "தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்", என்ற பிரச்சார இயக்கத்தின் நிறைவு விழாவில் திரு. அமித் ஷா உரையாற்றுகிறார்.

இன்றிரவு திருச்சியில் தங்கும் அவர், நாளை ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் வழிபடுகிறார்.

அதனைத் தொடர்ந்து, திருச்சி மன்னார்புரம் பகுதியில் பிஜேபி சார்பில் நடைபெறும் பொங்கல் விழாவில் திரு. அமித் ஷா கலந்து கொள்கிறார்.

இதையொட்டி, திருச்சி மாவட்டத்தில் இன்றும் நாளையும் ட்ரோன்கள் பறக்க தடை விதித்து, ஆட்சியர் திரு. சரவணன் உத்தரவிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம், கிராமப்புற தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாக குற்றம் சாட்டினார்.

தொழிலாளர்களும் புறக்கணிக்கப்பட்டதாக கூறிய அவர், இந்த திட்டத்தால் கிராமப்புறங்களில் நீண்ட கால வளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் தற்போதைய சட்டம் குறித்து காங்கிரஸ் கட்சி, மக்களை தவறாக வழிநடத்துவதாக குற்றம் சாட்டிய திரு. சிவராஜ் சிங் சௌஹான், புதிய சட்டத்தில், வேலை நாட்களின் எண்ணிக்கை மற்றும் ஊதியம் அதிகரிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

கிராமப்புற மக்கள், தங்களது கிராமத்தின் வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கவும் இதில் வகை செய்யப்பட்டிருப்பதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<

ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, அரசுமுறைப் பயணமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ளார்.

வரும் 6ஆம் தேதிவரை அந்நாட்டில் பயணம் செய்யும் அவர், இருநாடுகளுக்கும் பயனளிக்கக்கூடிய வகையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

>>>>>>><<<<<<<<

சிக்கிம் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு. Muhamed Mustaque இன்று பதவியேற்றார்.

கேங்டாக்கில் உள்ள மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆளுநர் திரு. ஓம் பிரகாஷ் மாத்தூர் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

சிக்கிம் உயர்நீதிமன்றத்தின் 24-வது தலைமை நீதிபதியாக திரு. Muhamed Mustaque பதவியேற்றுள்ளார்.

*>>>>>>><<<<<<<<*

*லடாக் யூனியன் பிரதேசத்தில் அரசு வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று யூனியன் பிரதேச நிர்வாகம் அறிவித்துள்ளது.*

*லே-யில் துணை நிலை ஆளுநர் திரு. கவிந்தர் குப்தா வெளியிட்ட லடாக் விளையாட்டுக் கொள்கையில், இந்த யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு கல்வி உதவித்தொகை விருதுகள் மற்றும் ரொக்கப்பரிசுகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.*

*மேலும், லடாக்கிற்கென விளையாட்டு கவுன்சில் ஒன்றை உருவாக்கி, கட்டமைப்பு வசதி மற்றும் பயிற்சி உள்ளிட்ட பணிகளை விளையாட்டுச் சங்கங்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், மேற்குவங்க மாநிலத்தில், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க ஒரு லட்சத்து 90 ஆயிரத்து 463 பேர் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

*இதேபோன்று, வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள, 38 ஆயிரத்து 214 பேரின் பெயர்களை நீக்கவும் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, வாக்காளர் பட்டியல் தொடர்பான விசாரணை பணிக்காக தெற்கு 24 பர்கானா மாவட்டத்திற்குச் சென்ற தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வையாளர் தாக்கப்பட்டது குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யும்படி அம்மாநில காவல்துறை தலைவருக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

ஜம்மு கஷ்மீர் சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 2ஆம் தேதி தொடங்கும் என்று துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால், துணை நிலை ஆளுநர் உரையுடன் தொடங்கவுள்ளது.

இக்கூட்டத் தொடர் மார்ச் மாதம் 31ஆம் தேதிவரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<<

மத்திய அரசின் தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலம், ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தில் இத்திட்டத்தின் கீழ், இல்லந்தோறும் கழிப்பறைகள் கட்டுவதற்கு மத்திய அரசு நிதியுதவி செய்துள்ளதை பயனாளிகள் வரவேற்றுள்ளனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 43 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<

திமுக மூத்த தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான திரு. எல்.கணேசன் தஞ்சையில் இன்று காலமானார். அவருக்கு வயது 92.

மாணவர் பருவம் தொட்டு திமுகவில் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ள எல். கணேசன், கடந்த 1980ஆம் ஆண்டு முதல் 1986வரை மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

திமுக சார்பில் இரண்டு முறை தமிழக சட்டப்பேரவை உறுப்பினராகவும், சட்ட மேலவை உறுப்பினராகவும், முதலமைச்சரின் பேரவைச் செயலாளராகவும் எல்.கணேசன் பணியாற்றியுள்ளார்.

அவரது மறைவுக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மதிமுக பொதுச்செயலாளர் திரு. வைகோ உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<<

கேரள மாநிலம், திருச்சூர் ரயில் நிலைய வாகன நிறுத்தப் பகுதியில் இன்று காலை ஏற்பட்ட தீ விபத்தில் 200-க்கும் அதிகமான இருசக்கர வாகனங்கள் எரிந்து சேதமடைந்தன.

ரயில் நிலையத்தின் 2வது நடைமேடைக்கு அருகில் உள்ள இந்த வாகன நிறுத்தத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்கான காரணம் குறித்து, காவல்துறையினரும், தீயணைப்பு துறையினரும் விசாரனை நடத்தி வருகின்றனர்.

இந்த விபத்து காரணமாக, அப்பகுதியில் ரயில் போக்குவரத்து எதுவும் பாதிக்கப்படவில்லை என்றும், ரயில்கள் வழக்கம் போல் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<<

சவுதி அரேபியாவின் மதீனாவில் நேரிட்ட சாலை விபத்தில் உம்ரா புனித யாத்திரை சென்ற கேரள மாநிலத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர்.

இவர்கள் பயணம் செய்த கார், Jeddah - மதீனா சாலையில், லாரி மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பலத்த காயமடைந்த 3 பேர் மதினா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

>>>>>>><<<<<<<<

*வெனிசுலாவின் இடைக்கால அதிபராக திருமதி. Delcy Rodriguez நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இதுவரை அதிபராக இருந்த திரு. நிகோலஸ் மதுரோ, அமெரிக்க படைகளால் சிறை பிடிக்கப்பட்டதை அடுத்து, தற்போது துணை அதிபராக உள்ள திருமதி. Delcy Rodriguez-ஐ இடைக்கால அதிபராக நியமித்து, அந்நாட்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*நாட்டின் இறையாண்மையை பாதுகாக்கவும், நிர்வாகப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்வதை உறுதி செய்யவும், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வெனிசுலா உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தெரிவித்துள்ளது.*

*இதனிடையே, திரு. நிகோலஸ் மதுரோ பதவிநீக்க விவகாரம் குறித்து விவாதிப்பதற்கான, ஐ.நா பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.*

*திரு. மதுரோவின் பதவிநீக்கம் ஒரு தவறான முன்னுதாரணம் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. ஆன்டனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.*

*வெனிசுலாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களால், தொலைத்தொடர்பு மற்றும் இணையதள சேவைகள் பாதிக்காத வகையில், அடுத்த மாதம் 3ஆம் தேதிவரை அந்நாட்டு மக்களுக்கு Starlink நிறுவனத்தால் இலவச இணையதள சேவைகள் வழங்கப்படும் என்று Tesla நிறுவனத்தின் தலைமைச் செயலதிகாரி திரு. எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*சர்வதேச இளையோர் பாய்மரப் படகு சாம்பியன் போட்டிகள், சென்னையில் இன்று தொடங்குகிறது.*

*வரும் 10ஆம் தேதிவரை சென்னை துறைமுக வளாகத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் 13 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானோர் பங்கேற்கின்றனர்.*

***Wind Surfing, Skiff*** **உள்ளிட்ட  ஐந்து பிரிவுகளில் இந்தப் போட்டி நடைபெறுகிறது.**

>>>>>>><<<<<<<<